# SECONDARY SCHOOL

## END - OF - YEAR EXAMINATION - 2017

## TAMIL LANGUAGE PAPER

## SECONDARY 3 EXPRESS / 3NA

FRIDAY

2 HOURS
(1100-1300)

## INSTRUCTIONS TO CANDIDATES

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதுவதற்கு முன்னர் விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உமது பெயரையும், வகுப்பையும், வரிசை எண்ணையும் தெளிவாக எழுதவும்.

3. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

This question paper consists of __ printed pages including the Cover Sheet

**SECONDARY** **SECONDARY 3**

More papers at www.testpapersfree.com

A1 <u>மரபுத்தொடர்கள், இணைமொழிகள்</u> (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, <u>அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.</u>

Q1 எந்தவொரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பு அதனால் விளையும் ____________________ ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

Q2 வாழ்க்கையில் முன்னேறுவதற்கு மாணவர்கள் ____________________ சிறந்து விளங்குவதோடு ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும்.

Q3 மாதவன் எதனையும் ____________________ செய்யும் பழக்கமுடையவனாக இருப்பதால் தலைமை அதிகாரி அவனுக்குப் பதவி உயர்வு கொடுத்தார்.

Q4 கனத்த மழையினால் கால்வாயில் விழுந்த ____________________ காப்பாற்றப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

Q5 சிங்கப்பூரில் அதிக விவாகரத்துகள் ஏற்படுவதற்குத் தம்பதியினரிடையே ____________________ மனப்பான்மை இல்லாததே முக்கியக் காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

| | |
|---|---|
| (1) தாயும் சேயும் | (6) ஆடல் பாடல்களில் |
| (2) ஒரு காலில் நின்று | (7) கல்வி கேள்விகளில் |
| (3) விட்டுக் கொடுக்கும் | (8) அருமை பெருமையை |
| (4) நகமும் சதையும் | (9) தட்டிக் கொடுக்கும் |
| (5) தலைமேற்கொண்டு | (10) நன்மை தீமைகளை |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

A2 <u>வாக்கியங்களை முடித்தெழுதுதல்</u> (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.
<u>உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதுக.</u>

Q6 அன்போடும் பண்போடும் வளர்க்கப்பட்ட மோகன் கோபத்தில் தன் நண்பனின் மனம் புண்படுமாறு பேசினான்.

அன்போடும் பண்போடும் வளர்க்கப்பட்ட மோகன் கோபத்தில் பேசிய பேச்சு

Q7 நாம் பொரித்த கோழிகளை அளவுக்கு அதிகமாக உண்டால் நோயில் சிக்கித் துன்பப்பட நேரிடும்.

நோயில் சிக்கித் துன்பப்படாமல் இருக்க

Q8 ஜூன் மாதத்தில் நடைபெற்ற உலக கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியில் ஜெர்மனி இங்கிலாந்தை வென்றது.

ஜூன் மாதத்தில் நடைபெற்ற உலக கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து

Q9 கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு உறுப்பினர்கள் மேளதாளத்துடன் வரவேற்கப்பட்டனர்.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு உறுப்பினர்களுக்கு

Q10 காலம் சென்ற திரு கோ கெங் சுவி அமைச்சராக இருந்தபோது ஜூரோங் தொழிற் பேட்டையை உருவாக்கிச் சிங்கப்பூர் வரலாற்றில் நீங்காத இடம் பெற்றுள்ளார்.

காலம் சென்ற திரு கோ கெங் சுவி சிங்கப்பூர் வரலாற்றில் நீங்காத இடம் பெற்றதற்கு

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

## "ஆ" பிரிவு

**B3** **அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

தலைவர்களாக இருந்தாலும் சரி, புரட்சியாளர்களாக இருந்தாலும் சரி, தோல்வி என்பது இயல்பான ஒன்றாகும். தோல்வி என்பது முக்கடைப்பே தவிர முச்சடைப்பு அல்ல என்று ஒரு கவிஞர் கூறியுள்ளார். வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் எல்லாருமே பல்வேறு Q11 ____ தோல்விகளை எதிர்நோக்கியவர்கள்தாம். தன்னம்பிக்கையாளர்கள் ஒரு இலட்சியத்தை நோக்கி செல்கின்றபோது அவசியம் தோல்வியைச் சந்தித்தே ஆக வேண்டியுள்ளது. Q12 ____ ஒரு காரியத்தில் ஈடுபட்டுவிட்டு வெற்றி பெற்றோமென்றால், அந்த வெற்றியின் அருமையை யாராலும் உணர முடியாது. அந்த வெற்றியைக்கூட மகிழ்ச்சியாய் ஏற்க முடியாது. கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு கிடைக்கின்ற வெற்றிதான் நிலைத்து Q13 ____

ஓர் இலட்சியத்திற்காகப் பயணம் செய்கின்றபோது, தோல்வி என்ற ஒன்று இல்லை என்ற Q14 ____ பயணம் செய்ய வேண்டும். அந்த நம்பிக்கையே எதிர்ப்படுகின்ற தோல்விகளை எல்லாம் Q15 ____ நம்மை மேலே எடுத்துச் செல்லும் என்கிறார்கள். தோல்வி என்பது நாம் பெற இருக்கின்ற வெற்றியின் காலதாமதம் என்று சொல்கின்றார்கள் தன்னம்பிக்கை தொடர்பான எழுத்தாளர்கள்.

| | |
|---|---|
| (1) எளிதாக | (6) வரும் |
| (2) பயத்தோடு | (7) நிற்கும் |
| (3) நிலைகளில் | (8) வெட்டி |
| (4) கடினமாக | (9) சாலைகளில் |
| (5) அழித்து | (10) நோக்கத்தோடு |

(அடுத்த பக்கம் பார்க்க)





More papers at www.testpapersfree.com

C3. <u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u> (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

<u>பகுதி 1</u>





காற்று வீசும் பாதையில் அகன்ற நிலப்பரப்பு இருந்தால் அக்காற்றில் போதிய நீராவி இருக்காது. அது வெறும் வறண்ட வெப்பக் காற்றாகவே வீசும். அதனால் மழையை உண்டாக்க முடியாது. ஆனால் காற்று வீசும் பாதையில் கடல் ஏரி போன்ற பெரிய நீர் நிலைகள் இருந்தால் அக்காற்று அவற்றில் உள்ள நீரைப் போதிய அளவுக்கு நீராவியாக மாற்றி எடுத்துச் செல்லும்.

காற்று எவ்வளவுக்கு எவ்வளவு நீரை உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றதோ, அவ்வளவுக்கு அதன் அடர்த்தியும் கனமும் அதிகரிக்கும், நீராவி நிறைந்த அக்காற்று வெப்பம் மிகுந்த நிலப்பரப்பின் வழியே செல்லும்போது அதன் வெப்பத்தால் விரிவடைகின்றது.) அதனால் அடர்த்தி குறைந்து இலேசாகி விடுகிறது. எனவே, அக்காற்று மேல் நோக்கிச் செல்கிறது. (மேலே சென்ற அக்காற்று மழை மேகங்கள் உருவாக வகை செய்கிறது. அம்மேகங்கள் அடுக்கடுக்காகச் சேரும்போது கதிரவன் ஒளி தடுக்கப்படுகிறது. அதனால் சூரிய ஒளியின் நிழல் அதன் மீது படிந்து நமக்குக் கரிய நிறமாகத் தோன்றுகிறது.) ஆகையால் நாம் அதனைக் கார் மேகம் என்கிறோம்.



More papers at www.testpapersfree.com

<u>வினாக்கள்</u>

Q16. எதனை வறண்ட காற்று என்று கூறலாம்?

(1) நீர் நிலைகள் இல்லாத இடத்தில் வீசும் காற்றை
(2) நீர் நிலைகள் நிறைந்திருக்கும் இடத்தில் வீசும் காற்றை
(3) கடல் இருக்கும் பகுதியில் வீசும் காற்றை
(4) காடுகள் இருக்கும் பகுதியில் வீசும் காற்றை ( )

Q17. எப்போது காற்றின் அடர்த்தியும் கனமும் குறையும்?

(1) குளிர்ந்த நிலப்பகுதியின் வழியாகச் செல்லும்போது
(2) சூடான நிலப்பகுதியின் வழியாகச் செல்லும்போது
(3) மரங்களடர்ந்த பகுதியின் வழியாகச் செல்லும் போது
(4) ஏரி இருக்கும் பகுதியின் வழியாகச் செல்லும் போது ( )

Q18. மழை மேகங்கள் கரிய நிறமாகத் தோற்றமளிப்பது ஏன்?

(1) அவற்றின் மீது நிழல் படிவதால்
(2) சூரிய ஒளித்தடையால்
(3) மேகங்களின் அடுக்குகளால்
(4) மேகங்களில் படும் சூரிய நிழலால் ( )



More papers at www.testpapersfree.com

<u>பகுதி 2</u>

மனிதனுடைய வாழ்க்கை இலையின் மேல் இருக்கும் பனித்துளியைப் போன்றதே. அந்தப் பனித்துளிகள் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தாலும் ஒரு சில நொடிப்பொழுதே அந்த இலைகளின் மேல் நீடித்து இருக்கும். பின்னர் மறைந்து விடும். அதே போல மனிதனுடைய வாழ்நாளும் குறுகியதே. அந்த வாழ்நாள் எப்போது, எப்படி முடிவுக்கு வரும் என்பதைப் பற்றி எவருக்கும் உறுதியாய்த் தெரியாது. ஆதலால், ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்ற அளவுக்குச் சமுகத்திற்குச் சேவையாற்ற வேண்டும். இதனையே நம்முடைய சமய நூல்களெல்லாம் வலியுறுத்திக் கூறுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட வகையில் விருப்பு-வெறுப்புகள் இருக்கின்றன; பலவற்றையும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை இருக்கிறது. ஆனால் மனிதன் தன்னுடைய வாழ்நாளையெல்லாம் இதற்கே செலவிட்டால் இந்த உலகத்தில் அவன் பிறந்ததன் குறிக்கோள்தான் என்ன? தன்னலத்தோடு தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் மட்டுமே ஒருவன் வாழ்வது எந்தக் குறிக்கோளும் இல்லாது செல்லும் பயணம் போன்றதாகும். ஒருவனுடைய வாழ்க்கையின் சிறப்பை அவன் எப்படித் தன் வாழ்நாளை அனுபவித்தான் என்பதைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. அவனைச் சுற்றி இருப்பவர்களுக்கும் இந்தச் சமுகத்திற்கும் அவன் எந்த அளவுக்குப் பயனுள்ளவனாக இருந்தான் என்பதைக் கண்டறிந்து, அந்த வகையிலே மதிப்பிட வேண்டும். நாம் இந்த உலகில் வாழும் நாள் மிகக் குறைவே. இதனை எப்போதும் நாம் நினைவில் கொண்டு, நம்மால் முடிந்த போதெல்லாம் பிறர்க்கு உதவி புரிய முன் வரவேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கைதான் முழுமையான வாழ்க்கையாகும்.



More papers at www.testpapersfree.com

<u>வினாக்கள்</u>

Q19. இப்பத்தியில் மனித வாழ்க்கை எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

(1) தன்னலமற்ற சேவைக்கு
(2) குறிக்கோள் இல்லாத பயணத்திற்கு
(3) இலைமேல் படிந்துள்ள பனித்துளிக்கு
(4) சமய நூல்களுக்கு ( )

Q20. ஒருவரது வாழ்க்கைச் சிறப்பு எதனைப் பொறுத்து அமையும்?

(1) அவர் செய்த செயல்களைப் பொறுத்து
(2) அவர் செய்த தியாகங்களைப் பொறுத்து
(3) அவர் வாழ்க்கையில் அனுபவித்த இன்பங்களைப் பொறுத்து
(4) அவரால் சமூகம் அடைந்த பயனைப் பொறுத்து ( )



More papers at www.testpapersfree.com

D5. சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

நாட்டின் மிகப்பெரிய சொத்தாக இன்று இருந்து வருவது மனித வளம். அம்மனித வளத்தை மேம்படுத்துவது கல்வி. கல்வி என்பது ஒரு தொடர் நிகழ்வு. பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து கற்றல் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. எனவேதான், ஒவ்வொரு நாடும் கல்விக்கென பெரும் தொகையைச் செலவிடுகின்றது.

சிறந்த கல்வியைப் பெறப் படிக்கும் பழக்கம் தேவை. படிக்கப் படிக்க வேகமாகப் படிக்கின்ற பழக்கம் உண்டாகிறது. அதுவே படிப்பாற்றலாக மாறுகிறது. படிப்பதால் வார்த்தை வளம் பெருகி, கருத்து வளம் கூடி, பேச்சுத் தெளிவடைகிறது. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்ற ஔவையின் வரிகளுக்கான உண்மையான பொருளை நாம் கண்கூடாக உணர முடிகிறது. அப்துல் காசிம் இஸ்மாயில் என்ற பாரசீக மன்னர் படையெடுப்புக் காலங்களில் கூட 400 ஒட்டகங்கள் புத்தகங்களைச் சுமந்து செல்வாராம். போர்க்காயங்களின் வலியைப் போக்க புத்தகங்கள் உதவியனவாம். தேச விடுதலைக்காகச் சிறை சென்ற உன்னத சிற்பிகள் சிறையின் கொடுமைகளை மறக்கப் படிப்பதிலே மனதைச் செலுத்தினார்கள். பிரயாண நேரங்களில் புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் பலரிடையே அதிகமாக உள்ளது. தனிமையை இனிமையாக்க நல்ல புத்தகங்கள் பயன்படுகின்றன. அருமையான பழங்கள் அளிக்கமுடியாத இனிய சுவையை நல்ல புத்தகங்கள் அளிக்கின்றன.

உலக வரலாற்றின் மாற்றங்களுக்குப் பல புத்தகங்கள்தான் வித்திட்டன. கார்ல் மார்க்ஸ் எழுதிய "மூலதனம்" என்ற நூல் உலகப் பொருளாதாரத்தின் அடிப்படையையே மாற்றி உலகின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. மகாத்மா காந்தியின் வாழ்வில் ஒரு கனத்தில் ஆக்கப்பூர்வமான மாற்றம் நிகழ்த்திய நூல் "கடையனுக்கும் கதிமோட்சம்" என்பதாகும். தனது ஆழ்மனக் கருத்துகள் யாவும் அந்நூலில் எதிரொளிக்கக் கண்டார். புத்தகங்களின் சாதனைகள் புத்துலக விடியலுக்குக் கதவுகளைத் திறந்து விடும் என்பதை வரலாறுகள் நிரூபித்துள்ளன.

படிக்கத் தெரியாதவனை 'மரம்' என்று ஔவையாரும், பாரதியும் கூறினார்கள். கற்றறிந்த அறிஞர்கள் இப்படிச் சொல்லியது கடுமையான வசைபாடுதலுக்காக அல்ல. ஐயோ! இப்படிப் படிக்காமல் வாழ்கிறார்களே என்று நினைத்து வருந்தி, நெஞ்சம் இறங்கி அனுதாபப்பட்டுக் கூறினார்கள். ஒரு மனிதன் படித்தால் அவனது அறிவு ஏழு தலைமுறைகளுக்கும் வழிவழியாகப் பயன்படும் என்ற திருவள்ளுவர், ஒரு மனிதன் எப்படித்தான் சாகும்வரைக்கும் படிக்காமல் இருக்கிறானோ! என்று வியக்கிறார்."

மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயரமன்று, அறிவு ஒன்றுதான். அந்த அறிவைப் பெற படித்தல் அவசியம். கற்றனைத்து ஊறும் அறிவு என்றதும் இதனையே. படிக்கப் படிக்க அறிவு வளரும். அதனைப் பிறருக்குச் சொல்லச் சொல்ல மேலும் விரியும்.



More papers at www.testpapersfree.com

<u>வினாக்கள்</u>

Q21. ஒரு நாடு கல்விக்கு அதிகம் செலவழிப்பது ஏன்? (4 மதிப்பெண்கள்)

Q22. படிக்கும் பழக்கம் எத்தகைய நன்மைகளை ஏற்படுத்துகின்றன? (6 மதிப்பெண்கள்)

Q23. "உலக வரலாற்றைப் புத்தகங்கள் மாற்றியமைத்தன" என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? (6 மதிப்பெண்கள்)

Q24. கட்டுரையாசிரியர் யார் வியப்படைவதாகக் கூறுகிறார்? ஏன்? (4 மதிப்பெண்கள்)

Q25. வாழ்வில் உயர்வடைய ஒருவன் என்ன செய்ய வேண்டும்? (5 மதிப்பெண்கள்)

<u>D6. சொற்பொருள்</u> (5 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.

Q26. கண்கூடாக

Q27. உன்னத

Q28. வித்திட்டன

Q29. நிரூபித்துள்ளன

Q30. வசைபாடுதலுக்காக

முற்றும்



More papers at www.testpapersfree.com

# TESTPAPER 1

Set 1- விடைகள்

எந்தவொரு செயலைச் செய்ய ......

Q1. 10 Q2. 7 Q3. 5 Q4. 1 Q5. 3

Q6. . . அவன் நண்பனின் மனத்தைப் புண்படுத்தியது.

Q7. . . நாம் பொரித்த கோழிகளை அளவுக்கு அதிகமாக உண்ணாமல் இருக்க வேண்டும்.

Q8. . . ஜெர்மனியிடம் தோற்றது.

Q9. . . மேளதாள வரவேற்பு அளிக்கப்பட்டது.

Q10. . . காரணம் அமைச்சராக இருந்தபோது அவர் ஜுரோங் தொழிற்பேட்டையை உருவாக்கியதே ஆகும்.

Q11. 3 Q12. 1 Q13. 7 Q14. 10 Q15. 5

Q16. 1 Q17. 2 Q18. 4 Q19. 3 Q20. 4

Q21. நாட்டின் மிகப் பெரிய சொத்து மனித வளம் என்பதும் அதை மேம்படுத்தும் கல்வி ஒரு தொடர் நிகழ்வு என்பதுமே ஒரு நாடு கல்விக்கு அதிகம் செலவழிப்பதற்குக் காரணம் ஆகும்.

Q22. படிக்கும் பழக்கம், சிறந்த கல்வியைப் பெறுவதற்கும், வேகமாகப் படிக்கின்ற பழக்கத்தை உண்டாக்குவதற்கும், வார்த்தை வளம் பெருகி, கருத்து வளம் கூடி, பேச்சுத் தெளிவடையவும், வலியைப் போக்கவும் உதவுகிறது. இவையே படிக்கும் பழக்கம் ஏற்படுத்தும் நன்மைகள் ஆகும்.

Q23. கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் என்ற நூல் உலகப் பொருளாதாரத்தின் அடிப்படையையே மாற்றி, உலகின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது. கடையனுக்குக் கதிமோட்சம் என்ற நூலில் தனது ஆழ்மனக் கருத்துகள் யாவும் எதிரொலிப்பதைக் கண்ட மகாத்மா காந்தியிடம் ஆக்கப்பூர்வமான மாற்றம் எற்பட்டது. இவ்வாறு "உலக வரலாற்றைப் புத்தகங்கள் மாற்றியமைத்தன" என்று கூறுவது பொருந்தும்.

Q24. கட்டுரையாசிரியர் திருவள்ளுவர் வியப்படைவதாகக் கூறுகிறார். ஒரு மனிதன் படித்தால் அவனது அறிவு ஏழு தலைமுறைகளுக்கும் வழிவழியாகப் பயன்படும் என்று திருவள்ளுவர் நம்பியதால், எப்படித்தான் ஒரு மனிதன் படிக்காமல் இருக்கிறானோ என்பதே அவர் வியப்படைய காரணம் ஆகும்.

Q25. வாழ்வில் உயர்வடைய ஒருவன், அறிவைத் தவிர தன்னை உயர்த்துவது பணமோ பதவியோ குலமோ பருமனோ உயரமோ அன்று என்பதை உணர்ந்து, அந்த அறிவைப் பெற படித்தல் அவசியம் என்பதையும் உணர வேண்டும்.

Q26. தெள்ளத் தெளிவாக

Q27. மேன்மை நிறைந்த

Q28. காரணமாக இருந்தன, அடித்தளமாக இருந்தன

Q29. மெய்ப்பித்துள்ளன

Q30. ஏச்சுகளுக்காக

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com